நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a NewsPaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 10 | ( 23 - 03 - 1992 ) | திங்கட்கிழமை | ஓசை: 34

## அனுமதி அட்டைகள் விநியோகம் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர் தரத்திற்கான விசேட பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை விநியோகிக்க யாழ் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கிறது பாடசாலைப் பரீட்சார்த்திகளது அனுமதி அட்டைகள் அவ்வக் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால்மூலம் அவர்களது சொந்த முகவரிக்கும், இடம்பெயர்ந்துள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளது அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன உரிய இடங்களில் உடனடியாக இந்த அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி பரீட்சார்த்திகள் கேட்டுக்கொள்ளபபட்டிருக்கின்றனர்.

# மணலாற்றின் அடர்ந்த காட்டில் என்றுமில்லா மூர்க்கமான போர்!

## இவ்வாறான சமர் நடைபெறவில்லை என்கிறார் டென்சில் கொப்பேகடுவ

(கொழும்பு)

"சமீபகால மோதல்களில் மிக மூர்க்கமான போர் மணலாற்றுப் பகுதியில் இடம் பெற்று வருவதாகவும், விடுதலைப் புலிகள் ரொக்கட்டுக்கள், மோட்டர்கள் மற்றும் சிறியவகையான ஆயுதங்கள் மூலமாக எம்மீது குண்டுகளைப் பொழிகின்றார்கள்" இவ்வாறு வடமாகாண இராணுவத்தளபதி டென்சில் கொப்பேகடுவ பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், கவசவாகனம் ஒன்றிற்குள் ரொக்கெட் ஒன்று வீழ்ந்து வெடித்ததாகவும், ஒரு ட்ரைக்டர் ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாகவும், இதனால் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார். இதேவேளை, அடர்ந்த காட்டுப்பகுதியில் மோதல்கள் இடம் பெறுவதனால் புலிகளின் இலக்குகள் மீது விமானப்படையினர் தாக்குதல்களை மேற்கொள்வது சிரமமாகவுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை மணலாற்றுச் சண்டையில் புலிகள்பயன்படுத்திய ஏவுகணையொன்று போர் டாங்கி உள்ளே விழுந்து வெடித்ததில் ஒரு இராணுவ வீரர் உயிரிழந்தார் என்று கொழும்பு ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதலின் போது இரு இராணுவத்தினரின செவிப்பறை சேதமடைந்தது என்றும், இந்த டாங்கியில அமர்ந்திருந்த அனைத்து இராணுவத்தினர்களும் காயங்களுடன் டாங்கியைக் கைவிட்டுத் தப்பி ஓடவேண்டியதாயிற்று என்றும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

புலிகள் கடந்த வாரத்தில் இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய போர்த் தாங்கிகளை எதிர்க்கும் துப்பாக்கி, புலிகள் பாவிக்கும் கண்ணி வெடியை விட ஆபத்தானவை என்று இராணுவ அதிகாரிகள் குறிப்பட்டதாக மற்றொரு பத்திரிகை கூறுகின்றது.

## குண்டுவீச்சு, எறிகணை தாக்கு மணலாற்றில் தொடர்கிறது

மணலாற்றுப் பிரதேசத்தில் சிறிலங்காபடையினரின் குண்டு வீச்சு தாக்குதல்கள் இடைவிடாது தொடர்கின்றன. சிறிலங்கா விமானப்படை விமானங்கள், உலங்குவானூர்திகள் நடாத்தி வருகின்றன.

இதேவேளை கடற்படைப் பீரங்கிப் படகுகள் பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. இப் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாம் எறிகணைகள் காட்டுப்பகுதிகளிலும் குடிமனைகளிலும் வீழ்ந்து வெடிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அகோரக்குண்டு வீச்சுகளினாலும்எறிகணைத்தாக்

## நள்ளிரவில் ஒளிக்கோடு

(நமது நிருபர்)

கிழக்கு வானத்தில் நேற்றிரவு பன்னிரண்டு மணியளவில் மிக நீளமான மஞ்சள் ஒளிக்கோடொன்று அவதானிக்கப்பட்டது. இது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மெதுவாக அசைந்து கொண்டிருந்தது

இந்த ஒளிக்கு காரணம் என்னவென்பது அறியப்படவில்லை.

## மூதூரில் காலவரையறையற்ற ஊரடங்கு அமுல்

திருக்கோணமலை மாவட்டம் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று மாலை ஐந்து மணி. தொடக்கம் காலவரையறையற்ற ஊரடங்குச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டிசுட்டான் விமானதாக்கு ஆலயம், பாடசாலை சேதம்

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டிசுட்டான் பகுதியில் பகுதியில் நேற்றுக் காலை 6.40 மணியளவில் விமானக் குண்டு வீச்சு நடாத்தப்பட்டது. சிறிலங்காவின் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் அப்பகுதியில் நான்கு குண்டுகளை வீசின. இந்தக் குண்டு ...னத்தம்பி பாடசாலையும் பெரும் சேதத்திற்கு உள்ளாகின.

இதேவேளை 14 ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் சோ. அழகையா என்பவரது வீடு சேதமடைந்ததாக செய்திகள்

புலிகள் - இ. தொ. கா உறவு

## 'இன்டர் போல்' உதவியுடன் விசாரணை வேண்டும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் இ. தொ. காவுக்கும் இடையே தொடர்பு உண்டா என்பதை கண்டறிய 'இன்டர்போல்' எனப்படும் சர்வதேச பொலிசாரைப் பயன்படுத்தவேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக இந்தியா விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தியுள்ளது. இந்த நிலையில் அரசாங்கம் புலிகளுடன் எப்படி கணக்கு வழக்கு வைக்கப் போகிறது என்பதைக் கூற வேண்டும்.

தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக அரசாங்கம்

[4ஆம் பக்கம் பார்க்க]

## தெரிவுக் குழுவின் விசாரணைகள் முடிவு

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நேர்முக விசாரணைகள் இன்றுடன் முடிவடையவுள்ளன

அரசியற் தீர்வொன்றைக் காண்பது தொடர்பாக தென் மாகாண முதலமைச்சர் எம். எஸ். அமரசிறி, முன்னாள் பொத்துவில்பிரதிநிதிஎம்.எம். ஜலால்தீன் ஆகியோர் இன்று தெரிவுக்குழு முன் தனித்தனியாக சாட்சியமளிக்கவுள்ளார்.

இதனைத்தொடர்ந்து சாட்சியங்கள் பதிவுசெய்யும்வேலை நிறைவு பெற்றதும் மூன்று வாரங்களினுள் பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பேயாடி கூழாங்குளத்தில்

## இராணுவத்தின் சூட்டிற்கு பொதுமகன் ஒருவர் பலி

வவுனியா பேயாடி கூழாங்குளம் வீதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த 21 ஆம் திகதி காலை மேற்படி இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா நகரப்பகுதிசெல்லமுனைந்த பொதுமகனே கொல்லப்பட்டவராவார்.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த தியாகராஜா என்ற குடும்பஸ்தரே இறந்துள்ளார் என்று அறியப்பட்டது. இவரது சடலம் வவுனியா அரசாங்க வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. [தி]

## பாடசாலை மாணவன் உளவாளிகளால் கைது

(யாழ்ப்பாணம்)

...யாலயத்தில் கல்வியைத்

டுள்ள சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த 21 ஆம் திகதி காலை மேற்படி இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்

கொல்லப்பட்டவராவார்.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த தியாகராஜா என்ற குடும்பஸ்தரே இறந்துள்ளார் என்று அறியப்பட்டது. இவரது சடலம் வவுனியா அரசாங்க வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. [தி]

## பாடசாலை மாணவன் உளவாளிகளால் கைது

(யாழ்ப்பாணம்)

கல்வியைத் தொடர்வதற்காக வவுனியா நகரம் சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் இராணுவ உளவாளிகளினால்கைது செய்யப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்வதற்காக சென்றவரே கைது செய்யப்பட்டார்.

நடராசா பத்மசிறி (21) என்பவரே இராணுவ உளவாளிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது தற்போதைய நிலை பற்றி அறியப்படவில்லை. [தி]

## இன்று வரும் குமணவில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான பிறப்புப் பதிவுப் புத்தகங்களின் ஓர் தொகுதி இன்று வரும் என எதிர்பார்க்கப்படும் குமண என்கின்ற கப்பலில் எடுத்துவரப்படுகின்றது.

யாழ். போதனா வைத்திய சாலையிலும் ஏனைய வைத்திய சாலைகளிலும் சுமார் 8000 குழந்தைகளின் பிறப்புகள் பதியப்படாமல் உள்ளன இதற்காக யாழ் அரச அதிபர் கொழும்பில் அரசுக்கு விடுத்த வேண்டுகோளில் இது அனுப்பி வைக்கப்படுகின்றது பிறப்புப் பதிவுப் புத்தகங்கள் அத்தியாவசியப் பொருள்களுடன் குமண கப்பல் பருத்தித்துறையை இன்று வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## காங்கேசன் துறைமுகத்திற்கு மேலதிக லொறிகள் செல்வது சாத்தியமில்லை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைமுகப் பகுதியில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு மேலதிக லொறிகளை அனுப்புவது சாத்தியமில்லை என்று யாழ். செயலக அத்தியாவசிய சேவைகள் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இத் துறைமுகத்தில் உள்ள களஞ்சியத்தில்இருந்து தினமும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி நினைவுநாள் இன்றைய கூட்டமும் உண்ணாவிரதமும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வட்டவைப் பிரிவில் அன்னை பூபதி நினைவாக ஆவரங்கால சிவன் கோயிலில் இன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை அடையாள உண்ணாவிரதமும், மாலை 7.00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும்இடம்பெறவுள்ளன.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலையரசன், மதிவாணி, தேவர் அண்ணா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். இதனைத் தொடர்ந்து சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

# குண்டுவீச்சு, எறிகணை தாக்கு மணலாற்றில் தொடர்கிறது

மணலாற்றுப் பிரதேசத்தில் சிறிலங்காபடையினரின்குண்டு வீச்சு தாக்குதல்கள் இடைவிடாது தொடர்கின்றன. சிறிலங்கா விமானப்படை விமானங்கள், உலங்குவானூர்திகள் என்பன காட்டுப்பிரதேசங்கள் கரையோரப் பிரதேசங்கள் குடிமனைகள் என்பன மீது கடும் குண்டுவீச்சுகளை நடாத்தி வருகின்றன.

இதேவேளை கடற்படைப் பீரங்கிப் படகுகள்பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. இப் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து இடைவிடாது மேற்கொள்ளப்படும் எறிகணை வீச்சினால் அப்பகுதி அதிர்ந்து கொண்டிருக்கிறது- எறிகணைகள் காட்டுப்பகுதிகளிலும் குடிமனைகளிலும் வீழ்ந்து வெடிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அகோரக்குண்டு வீச்சுகளினாலும்எறிகணைத்தாக்குதலாலும் காட்டுவளங்கள் பெருமளவில் அழிந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள்மேலும்தெரிவிக்கின்றன.

# பொலநறுவை மோதலில் மூன்று புலிகள் வீரச்சாவு



மேஜர் ஈஸ்வரன்

பொலநறுவையில் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் ஏழுஇராணுவத்தினர் பலியாகியது தெரிந்ததே.

இந்தத் துணிகரத்தாக்குதல் பொலநறுவ டுவார்ட்டஸ்முகாமிலிருந்து சிங்கபுர இராணுவ முகாமை நோக்கி 'பவள்'வாகனம் சகிதம் சென்று கொண்டிருந்த 65 இற்கு மேற்பட்டோரைக் கொண்ட இராணுவ அணிமீது நடாத்தப்பட்டது.

இதில் பலியாகிய ஏழு இராணுவத்தினரதும் உடல்களைக் கைவிட்டுவிட்டு ஏனையோர் முகாம்களுக்கு தப்பியோடி விட்டனர்.

இந்த தாக்குதலில் பல ஆயுதங்களும் இராணுவப் பொருட்களும் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டன. போராளிகள் தரப்பில் இரண்டு வீர வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இத்தாக்குதலை வெற்றிகரமாக நடாத்திவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போது ஆண்டாங்குளம் எனும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கினர் புலிகளின் எதிர்த்தாக்குதலில்இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

போரா்ளிகள் தரப்பில் ஒரு வீரவேங்கை வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.



முகில்வளவன்

இம்மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் ஈஸ்வரன் சந்திவெளி மட்டக்களப்பு, வீரவேங்கை அலன் (கணபதிப்பிள்ளை ராமச்சந்திரன் மொரக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு) வீரவேங்கை ராமமூர்த்தி (செல்லத்தம்பி பரமேஸ்வரன் காயாங்கேணி மாங்கேணி ம...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களை விடுவிக்க இராணுவம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கடற் பிராந்தியத்தில் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட கடற்தொழிலாளர்களை விடுதலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

கடற்படையினராலும், இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்ட கடற் தொழிலாளர்கள் தற்பொழுது இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், யாழ். அரச அதிபரும் பல தடவைகள் கொழும்பில் இராணுவ உயர் அதிகாரிகளுடனும், அரச அதிபர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என அவ்வப்போது பதில் கிடைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஒட்டிசுட்டான் விமானதாக்கு ஆலயம், பாடசாலை சேதம்

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டிசுட்டான் பகுதியில் பகுதியில் நேற்றுக் காலை 6.40 மணியளவில் விமானக் குண்டு வீச்சு நடாத்தப்பட்டது. சிறிலங்காவின் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் அப்பகுதியில் நான்கு குண்டுகளை வீசின. இந்தக் குண்டு வீச்சிற்கு ஒரு ஆலயமும் சின்னத்தம்பி பாடசாலையும் பெரும் சேதத்திற்கு உள்ளாகின.

இதேவேளை 14 ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் சோ. அழகையா என்பவரது வீடு சேதமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## மணலாற்று மோதலில் இரு புலிகள் வீரச்சாவு



கப். பரஞ்சோதி



2 ஆம் லெப். ஆனந்தன்

மணலாறு 15 ஆம் கட்டையில் கடந்த வியாழனன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான பெரும் மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த கப்டன் பரஞ்சோதி (சிவபாதசுந்தரம் அனுசீலன், 5 ஆம் வட்டாரம் திரியாய், திருக்கோணமலை) நேற்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவையில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளால் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர்மீது நடாத்திய தாக்குதலில் பல ஆயுதங்களும் இராணுவ பொருள்களும் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு;

- ★ ஏ.கே.எல்.எம் ஜி - 01
- ★ 40 மி. மீ பிஸ்ரல் - 01
- ★ 40 மி மீ பிஸ்ரல் எறிகணை - 13
- ★ ரி 56 - 1 ரக துப்பாக்கி - 02
- ★ ரி 86-1ரகதுப்பாக்கி - 02
- ★ ரி-56 மகசீன் - '2
- ★ ரி-81 மகசீன் - 12
- ★ நடுத்தர ரவைகள் - 990
- ★ ரம் மகசீன் - 03
- ★ ஏ.கே.எல்.எம் ஜி லிங் - 454
- ★ ஏ கே. கோல்சர் - 07
- ★ சப்பாத்து - 06 சோடி

## கிளிநொச்சி ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகல் 12 00 மணியில் இருந்து நீக்கப்பட்டிருப்பதாக சிறிலங்காவின் கூட்டுப்படைத் தலைமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலைகளில் பதுங்கு குழிகள் இரண்டாம் உலகப்போரின் அனுபவம்

மட்டக்களப்பு நகரத்திலிருந்த அனைத்துப் 'பாடசாலைகளிலும் பதுங்கு குழிகள் இருந்தன. மாணவர்கள் காதுகளில் பஞ்சுடனும் வாயில் பென்சில்களுடனும் விமானத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பது எப்படி என்பது பற்றிய பயிற்சிகளில் அடிக்கடி ஈடுபடுத்தப்பட்டனர்.

விசேட சங்கொலி எழுப்பப்பட்டு விமானத் தாக்குதலின் எச்சரிக்கை விடுக்கப்படும் முறையே பின்னர் காலை ஆறு மணிக்கும் மாலை ஆறு மணிக்கும் நேரத்தைக் குறிப்பிடுவதற்காக மட்டக்களப்பில் அறிமுகமாகியது.

இவ்வாறு தற்போது கொழும்பு வந்துள்ள இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பங்கு கொண்ட முன்னாள் இராணுவத்தினர் கூறியுள்ளனர். பிரிட்டன், கனடா, மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து கொழும்பிற்கு முன்னாள் இராணுவத்தினர் சிலர் வந்துள்ளமை தெரிந்ததே. இந்த வகையில் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் சுவடுகள் பல பதிந்த மட்டக்களப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

மட்டக்களப்பு நகரத்தின் முக்கிய பகுதியில் இன்றும் கூட சிவில் நிர்வாகத்தின் மையமாக டச்சுக் கோட்டை இருப்பதைக் காணலாம்.

உலகப் போரின் போது இக்கோட்டையின் மீது ஜப்பானிய விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. பல்வேறு பீரங்கிகளின் பகுதிகள் இக்கோட்டையைச் சுற்றி காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமையால் இதனை ஒரு இராணுவத்தளம் என்ற பிழையான அனுமானிப்பிலேயே ஜப்பானிய விமானங்கள் இத்தாக்குதல்களை நடத்தினவானத்தை நோக்கிய நிலையில் பொருத்தப்பட்டிருந்த இப்பீரங்கிகள் அரும் பொருள்களாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன என்பதை எவர்தான் ஊகிக்கக் கூடும்.

ஆனால் இதன் ஆபத்தை உணர்ந்து கொண்ட அப்போதைய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் சில தொழிலாளர்களைக் கொண்டு இரவோடு இரவாக அவற்றை அப்புறப்படுத்தினார்.

மட்டக்களப்பு கடற்கரைப் பகுதியில் பிரித்தானிய கடற்படைக்கு சொந்தமான எச். எம். எஸ் ஹேர்மஸ் என்ற விமானந்தாங்கிக் கப்பல், ஜப்பானிய கப்பலில் இருந்த போர் விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்காகிக் கடலில் மூழ்கியது. உண்மையில் ஜப்பானின் இந்த விமானந்தாங்கிக்கப்பல் போர் துறைமுக தாக்குதலில் பங்கு கொண்ட அட்மிரல் குமா என்பவரால் இலங்கை நோக்கி கொண்டு வரப்பட்டது.

சிட்னி றெனோல்ட் என்னும் முன்னாள் பத்திரிகையாளர் ஒருவர் 1976-ம் ஆண்டில் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் எச். எம். எஸ். நேர்மஸ் கடலில் மூழ்கிய தினத்தை குறிக்கும் வகையில் ஆண்டு தோறும் ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இக்கப்பலில் இருந்து தப்பிய அதிகாரி ஒருவர் கப்பலின் கப்டன் மற்றும் சிப்பந்திகளை நினைவு கூர்ந்து ஒரு வாசகம் இவ் விளம்பரத்தில் இடம் பெற்றிருக்கும். எஸ். கே. ஏ. பிளாய்க் என்னும் இக்கப்பல் அதிகாரி மட்டக்களப்பு கரையை அடைந்து அங்கிருந்து கண்டி வைத்தியசாலையில் அவுஸ்ரேலிய டாக்டர்களால் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

1942 ஏப்ரல் 9-ம் திகதி காலை 10.55 மணிக்கு ஜப்பானிய விமானங்கள் எச். எம். எல். ஹேர்மஸ் என்ற இக் கப்பலை மட்டக்களப்பு கரையிலிருந்து சில மைல் தொலைவில் மூழ்கடித்தன.

ஹேமர்ஸ், அதற்கு காவலாக இருந்த ஏனைய கப்பல்களும், அவுஸ்திரேலியாவின் எச். எம். ஏ. எல். வம்பயர் என்ற நாசகாரியும், பிரிட்டிஷ் சேர்ஜன்ட் என்னும் டாங்கர், இதனுடன் கடலில் மூழ்கின. பிரித்தானிய கடற்டை மரபுக்கேற்ப ஹேர்மஸ் கப்பலில் கப்டன் ஒன்சுலோவும் கப்பலுடனேயே கடலில் மூழ்கியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பிலிருந்து வரும் ரயில்வேப் பாதைகளை ஜப்பானிய விமானங்கள் குண்டு வீசி அழுக்க முயன்றமை மீண்டும் மட்டக்களப்பை முன்னணிக்கு கொண்டு வந்தது. ஆனால் இந்த முயற்சியில் ஜப்பானிய விமானங்கள் சித்தாண்டியிலிருந்த தென்னந்தோட்டங்களையே பெருமளவில் நாசமாக்கின.

## உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வலிகாமம் மேற்குப் பிரிவுக்கான போட்டியில் வட்டுக்கோட்டை வட்டு அணி அளவெட்டி விநாயகர் அணியை எதிர்த்து ஆடவுள்ளது. இப்போட்டி சுன்னாகம் ஸ்கந்த வரோதயா கல்லூரி மைதானத்தில் பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெறவுள்ளது.

## சிப்பாய் கைது

(கொழும்பு)

தெரணியாகலபொரலன்கட எனும் இடத்தில் ஆசிரியர் ஒருவரின் தங்கச் சங்கிலியை அபகரித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவ வீரரும் அவரது சகபாடியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் நடத்திய திடீர் தேடுதலின்போது இராணுவ வீரரின் வீட்டில் மண்ணெண்ணெய்ப் போத்தலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் சங்கிலியை மீட்டனர்.

## பெயர்மாற்றம்

### ஸ்ரீசண்முகான் கோகுலன்

இராஜவீதி, தோப்பு, அச்சுவேலியில் வசிப்பவரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 13-ம் ஆண்டு கணிதப்பிரிவு மாணவருமான ஸ்ரீ சண்முகான் ஸ்ரீகோகுலவிமல இந்திரன் ஆகிய நான் எனது பெயரை ஸ்ரீ சண்முகான் கோகுலன் என மாற்றியுள்ளேன் என்பதை ஸ்ரீலங்கா குடியரசுக்கும் மற்றும் சகலருக்கும் அறியத் தருகிறேன்.

(2320)

## காமினியின் பிறந்தநாளில் முன். அமைச்சர் நட்வர்சிங்

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் கே. நட்வர்சிங் தனது பாரியார் சகிதம் கொழும்புக்கு விஜயம் செய்தமைக்கு காரணம் முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்காவின் ஐம்பதாவது பிறந்த தினக் கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வதேயாகும் என்று லேக்ஹவுஸ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த வெள்ளியன்று இலங்கையின் முன்னணி ஐந்து நட்சத்திர ஹோட்டலான ஹோட்டல்லங்கா ஒபறோயில் முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கா தமது ஐம்பதாவது பிறந்த தினத்தை கொண்டாடினார் என்றும், சுமார் தொள்ளாயிரம் ராஜதந்திரிகள் உட்பட நவீன உடையணிந்த பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காமினி திசநாயக்காவின் கொத்தணி முறையை ஆதரித்த மகாவலி விவசாயிகளும், தோட்ட தொழிலாளர்களும் இவ் வைபவத்திற்கு அழைக்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணிக்கும்

## வரி விளம்பரம்

### MANAGEMENT ENGLISH

வங்கிகளின் பதவி உயர்வுகளுக்கான தகுதிகாண் பரீட்சைகளுக்கு B. T. I. உட்பட உயர் ஆங்கிலத்துடன் ஒருங்கமைந்த பயிற்சி முன்னாள் இலங்கை வங்கி உப முகாமையாளர் V. N. Kandasamy யினால் நடாத்தப்படுகிறது. 87, திருநெல்வேலி றோட், கொக்குவில். (2325)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992. 04 30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

உயிரிரசாயனவியலில் உதவி விரிவுரையாளர் / விரிவுரையாளர்.

குறிப்பு:

உயிரிரசாயனவியல் / உயிர்த்தொழினுட்பத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

உதவி விரிவுரையாளர்:

ரூபா 3,900 / மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுக்குத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500-10X200 -6,500 /- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் 4,500 / சம்பளப் படியில் வைப்பார்.

விரிவுரையாளர் (மருத்துவம்:)

ரூபா 4500 - 10X 200 - 6, 500 /- மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4500 ரூபாவுக்கு மேலே இரண்டுபடி அதிகமாக அதாவது 4900 /- ரூபா சம்பளததில் வைக்கப்படுதல் வேண்டும்:)

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவா

## ஊழியரின் அதிகாரங்கள் ஆ. குழுவிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் நியமனம், இடமாற்றம் வேலை நீக்கம், ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு, பதவி உயர்வு ஆகியன தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அரசசேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

இதுகாலவரை மேற்படி அதிகாரங்கள் அரச சபைகளிடமும் அமைச்சுக்களின் செயலாளர்களிடமுமே இருந்து வந்தன.

இலங்கை நிர்வாக சேவை கணக்காளர் சேவை பொறியியல் சேவை, விஞ்ஞான சேவை திட்டமிடல் சேவை, மிருக உற்பத்தி மற்றும் சுகாதாரசேவை, மருத்துவசேவை ஆகியன தற்போது சபைகளினாலும் சம்பந்தப்பட்ட அமைச்சு செயலாளர்களினாலும் நிர்வகிக்கப்பட்டுவந்தாலும் இனிமேல் அரசசேவை ஆணைக்குழுவின் பணிப்புரையின் பேரிலேயே இயங்கும்.

அரச நிறுவன உயர் அதிகாரிகளின் பதவிகள் தொடர்பான விடயங்கள் அரச சேவை ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் வரமாட்டா என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாலம் பணிமனையினர் உதவ வருமாறு அழைப்பு

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையே தொடர்ந்து நடைபெற்று வரும் மோதல்களையடுத்து காயமடையும் போராளிகளைப் பராமரிப்பதற்காக பாலம் பணிமனையினர் தனியார் நிறுவனங்களில் உதவியை நாடியுள்ளனர்.

ஒவ்வொரு தனியார் கல்வி நிலையத்திலிருந்தும் தினமும் பத்து மாணவர்கள் உதவ முன்வரலாம் என்றும் போராளிகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபடலாம் என்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது

## மெய்வல்லுனர் போட்டி

யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி கடந்த வியாழக்கிழமை (19.3 92) பிற்பகல் நடைபெற்றது.

இப்போட்டியில் பங்குபற்றிய அருந்ததி. ரதி. சரஸ்வதி லக்ஷ்மி, பார்வதி, இல்லங்களில ரதி இல்லம் முதலாம் இடத்தையும், அருந்ததி லக்ஷ்மி இல்லங்கள் முறையே 2ம், 3ம், இடங்களையும் பெற்றுக் கொண்டன.

பரிசு பெற்ற வீராங்கனைகளுக்கு திருமதி அன்னலக்ஷ்மி பாலசிங்கம் பரிசில்களை வழங்கினார்.

## பெற்றுக் கொள்ளவும்

வினாசி. கதிரவேலு (380141183V) என்பவரது அடையாள அட்டை என். கனகலிங்கம் என்பவரால் கொம்படிப் பாதையிலிருந்து கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## நினைவு கூருகின்றோம்

### 1992-03-23

198? ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு. கிரான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ கே. குமார் (கிரான், மட்டக்களப்பு.)

1987 ஆம் ஆண்டு யாழ். - பண்ணை காவல் நிலைய விடுதியில அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

இல்மன் (பிலிப்பு மெதினோ கீர்த்திராஜா - கள்ளிக்கட்டைக்காடு, மன்னார்.)

இராஜவீதி, தோப்பு, அச்சுவேலியில் வசிப்ப
வரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 13-ம் ஆண்டு கணிதப்பிரிவு மாணவருமான ஸ்ரீ சண்முகான் ஸ்ரீகோகுலவிமல இந்திரன் ஆகிய நான் எனது பெயரை ஸ்ரீ சண்முகான் கோகுலன் என மாற்றியுள்ளேன் என்பதை ஸ்ரீலங்கா குடியரசுக்கும் மற்றும் சகலருக்கும் அறியத் தருகிறேன்.

(2320) உண்மையுள்ள ஸ்ரீகோகுலன்.

---

## நீங்காத நினைவில்...

### ஆறாம் ஆண்டு மார்ச் - 23



## அமரர் கே. டானியல்

### (மக்கள் புரட்சி எழுத்தாளர்)

| | |
|---|---|
| மக்கள் சேவைக்காக ஈழமண்ணில் பிறப்பு | சேவைக்காலத்தில் தமிழகத்தில் நிலைப்பு |
| 1927. 03. 25 | 1986. 03. 23 |

''புரட்சியைத் துரிதப் படுத்தும் வழிமுறை எதுவோ அதுவே நெறியின் இலக்கியமாகும்'' என்று லெனின் கூறியதையே நான் நெறியாக மதிக்கிறேன், அதைத் துரிதப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாக எழுத்தையும் மதிக்கிறேன்.

கே. டானியல்
'வசந்தம்'
76/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவோடு
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தோழர்கள்,
பொதுமக்கள்.

(சி/4078)

---


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணிக்கும்
காண்பிக்கப்படுகின்றது

## FIVE FOR HELL

(நரகத்திற்கு ஐவர்)
(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

[சி/[0141


---

## 1-ம் ஆண்டு கண்ணீரஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1976 | 1991 |
| 05 | 04 |
| 22 | 04 |



## செல்வி இராசையா மாலினி

### திதி: 23-03-1992

அரும்பொன்று மலரான பருவந் தன்னில்
அனற்காற்று மலர்ச் செடியைச் சிதைத்ததுவோ!
அருந்தவத்தால் வந்தவளே அமிழ்தே யன்பே!
உருக்குலைந்தோம் உனைப்பிரிந்த சோகத்தாலே
பெருந்துயரம் எவர்தீர்ப்பார் புலம்புகின்றோம்
பெருமகளே திருமகளே பெட்பார் செல்வி
கரும்பனையாய் மாலினியே கலிதீர் கண்ணே
சாந்திபெற அருட்பதங்கள் இறைஞ்சுகின்றோம்.

-- குடும்பத்தினர்

(சி-4048)

---

போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4500 ரூபாவுக்கு மேலே இரண்டுபடி அதிகமாக அதாவது 4900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்:)

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற, 23 X 01 ச.மீ அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும், அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

1992. 03. 21
(சி 4082)

---

## கண்ணீர் அஞ்சலி

### 2ஆம் லெப். றீகன்

23-12-1991 அன்று புடவைக்கட்டு திருமலை என்னும் இடத்தில் ராணுவத்தினருக்கும் எம்மவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த 2ஆம் லெப். றீகன் (இரத்தினம் சோதிலிங்கம்) மேன்காமம். திருமலை. இவருக்கு 90-ம் நாள் கண்ணீர் அஞ்சலி.

(2324) குடும்பத்தினர்

---

வீரச்சாவெய்திய -

★ **கே. குமார்** (கிரான், மட்டக்களப்பு.)

1987 ஆம் ஆண்டு யாழ். - பண்ணை காவல் நிலைய விடுதியில அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**இல்மன்** (பிலிப்பு மெதினோ கீர்த்திராஜா - கள்ளிக்கட்டைக்காடு, மன்னார்.)

**2 ம் - லெப். துரை** (மரியாம்பிள்ளை கிறிஸ்ரலோ - முள்ளியான், வெற்றிலைக்கேணி)

**ராஜ்மோகன்** (அழகக்கோன் யூட் ராஜ்குமார் - இளவாலை.)

**அருணன்** (சிவசுப்பிரமணியன் ரகுராஜன் - கட்டுடை, மானிப்பாய்.)

**பண்டிதர்** (வேலணை.)

1988 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**ஜோர்ச்** (வில்லியம் றொபேட் - ஈச்சிலம்பத்தை, திருக்கோணமலை.)

முத்தையன்கட்டில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**லெப். நந்தன்** (தம்பிராசா சிவானந்தன் - கல்வளை, சண்டிலிப்பாய் தெற்கு.)

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**தயா** (த. உதயராஜ் - மட்டக்களப்பு.)

நாயாறில், இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். றெஜினோல்ட்** (இராசையா சின்னராசா - சர்வோதயா வீதி, புத்தூர்.)

**மைக்கல்** (சின்னப்பு ஜோண்சன் குயின்ரன் - மணியம்தோட்டம், யாழ்ப்பாணம்.)

1991 ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்காப் படை மினிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவெய்திய -

**கப்டன் விக்கி** (சுப்பையா மகேஸ்வரன் - கட்டையர்குளம், வளலாய்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் கே. குமார் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## விடுதலைப் புலிகள்
## மக்கள் முன்னணி

(சி/4086)

## சிந்தனைக்கு

ஒரு மக்களின் சுதந்திரங்களை முதலில் அழிப்பவன், அவர்களுக்கு அன்பளிப்புகளும் தானங்களும் தருபவன்

— பிளூட்டார்க்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 23-03-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

த பெ. எண் 05


# தமிழர் தாயகத்தை பறிக்க மேலும் ஒரு திட்டம்

மகாவலித்திட்டத்தின் 'அ' பிரிவு என அழைக்கப்படும் மகாவலி கங்கையின் கரையோரப் பகுதியில் 'அபிவிருத்தி' நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென சிறிலங்கா அரசாங்கம் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்திடம் நிதி உதவியைப் பெறுவதற்கு தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. இதேவேளை, வவுனியாவில் நிலமற்றவர்களுக்கு காணி வழங்குதல் என்ற போர்வையில் 2,280 ஏக்கர் நிலப்பரப்பை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கவுள்ள நிலப்பகுதியையும் அடையாளம் கண்டுள்ளது.

'அபிவிருத்தி' 'நிலமற்றவர்களுக்கு' காணி வழங்குதல் என்னும் போர்வையில், சிங்கள அரசாங்கம் வழமையாக மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் ஒருபகுதியே இதுவாகும்; இன்றைய சூழ்நிலையில், சிங்கள அரசாங்கம், குடியேற்றங்களுக்கு வழங்கும் முக்கியத்துவம், இராணுவத்தினருக்கு வழங்கும் முக்கியத்துவத்திற்கு ஒப்பானதாகும்.

மகாவலி 'அ' பிரிவு அபிவிருத்தித்திட்டமானது, மகாவலி கங்கை சழிமுகத்தை அண்டி உள்ள பகுதியில் 15,000 ஏக்கரில் புதிய குடியேற்றங்களை அமைப்பதுடன் தொடர்பு பட்டது. இத்திட்டத்தின் கீழ். தோப்பூர், கிளிவெட்டி, ஈச்சிலம்பத்தை, பட்டித்திடல், தெஹிவத்தை, சேருவாவெல பகுதிகள் அடங்குகின்றன. இப்பகுதியில் அபிவிருத்தி என்ற போர்வையில், மேற்கொள்ளப்படவுள்ள இத் திட்டம் திருக்கோணமலை மாவட்டத்திற்கும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் இடையில் மேற்கொள்ள முயற்சித்து வரும் 'வெலிஓயா' குடியேற்றத்திட்டத்திற்கு ஒப்பானதாகும்.

வெலிஓயாத் திட்டம் திருமலை மாவட்டத்தை முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பிரிப்பது போன்று மகாவலி 'அ' பிரிவு திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தை திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து பிரிக்கின்றது. இதன் மூலம் தமிழரின் தாயக நிலப்பரப்பு துண்டாடப் படுவதோடு, திருமலை மாவட்டத்தை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்து முழுமையான சிங்கள மாவட்டமாக மாற்றி விடலாம் என சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

இதேவேளை, வவுனியாவில் மேற்கொள்ளப்பட இருக்கும் குடியேற்றத் திட்டமானது வவுனியா நக

# ராஜீவ் காந்தி 'லஞ்சம்' வாங்கினார்; போபர்ஸ் பீரங்கி ஊழல் அம்பலம்

## சுவீடன் புலனாய்வு செய்தியாளர் உண்மையைப் புட்டு வைக்கிறார்

இந்தியாவின் தேசிய மட்டத்தில் ராஜீவ் காந்தியுடன் சம்பந்தப்படுத்தித் தீவிரமாக அலசப்பட்ட போபர்ஸ் பீரங்கி ஊழல் மீண்டும் தலைதூக்கியுள்ளது. ஹொவிற்கர் (மேல்நோக்கி நீண்ட வளமாகச் சுடக்கூடியது) பீரங்கிப் பேரத்தில் ராஜீவ் காந்திக்குத் 'தரகுப் பணம்' வழங்கப்பட்டது என்ற விஷயங்களைக் கூறும் கட்டுரைத் தொடர் டாக்என்ஸ் நைகெற்றர் என்ற சுவீடன் நாட்டு முன்னணிப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. அப்பத்திரிகையில் புலனாய்வுச் செய்தியாளர் போ. ஜி அன்டர்சன் ராஜீவ் காந்தி 'தரகுப் பணம்' வாங்கினார் என்ற உண்மையைத் தெளிவாகத் தொட்டுக் காட்டுகிறார். இச்செய்தியை பி. பி. ஸி. அதன் ஒலியலைகளில் பல மொழிகளிலும் பரவலாக வெளியிட்டது.

நாடு தழுவியதும், பலர் கவனத்தை ஈர்த்ததுமான இந்தப் பீரங்கி வியாபாரப்பேரத்தில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு லஞ்சமாகப் பணம் கொடுக்கப்பட்டது என்பதை முதல் முறையாக நோபல் இன்டஸ்ரீஸ் முக்கியஸ்தர் ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார். அவர் தனது பெயரை வெளியிட விரும்பவில்லை பெயரை வெளியிட விரும்பாத அந்த முக்கியஸ்தர் போ. ஜி அன்டர்சனுக்கு வழங்கிய செவ்வியில் 'கைலஞ்சம்' என்ற சொல்லைத் தவிர்த்துக் கொண்ட போதிலும் 'தரகுப் பணம்', 'சேவைப் பணம்' என்ற சொற்களையே உபயோகிக்கிறார். இச்செவ்வியின் அடிப்படையில் அன்டர்சன் 1992 பெப்ரவரி 17, 18, 19. ஆம் திகதிகளில் எழுதிய புலனாய்வுக் கட்டுரைத் தொடரில் ராஜீவ் காந்தி லஞ்சம் பெற்றுக் கொண்டார் என்ற உண்மையைத் தெளிவாகத் தொட்டுக் காட்டுகிறார்.

1986 - இல் இடம் பெற்ற இந்தப்பீரங்கிப்பேர ஊழல் இன்று வரை நீறுபூத்த நெருப்பாகவே இருந்து வந்தது. அதை ஊதி எரிய வைத்துள்ளார் நோபல் இன்டஸ்ரீஸ் முக்கியஸ்தர்.

இந்தியாவுடனான ஆயுத வியாபாரத்தில்பிரான்சுநாட்டு ஆயுத உற்பத்தி நிறுவனமான GIAT போபர்ஸ் நிறுவனத்துடன் போட்டியிட்டது. கழுத்தை நெரிக்கும் இந்த வியாபாரப் போட்டியில் இரு நிறுவனங்களுமே லஞ்சத்தை வாரிவழங்கத் தயாராக இருந்தன.

மேல் நோக்கி நீண்ட வளமாகச் சுடக்கூடிய பீரங்கியின் தேவையை 1975 இல் இந்திய இராணுவம் உணர்ந்திருந்தது. 1990 களில் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஹொவிற்சர் ரகப் பீரங்கி தேவை என இந்திய இராணுவ தலைமைப் பீடம் கருதியது. அதன் விருப்பம் TR 155 என்ற பிரான்சு நாட்டுத் தயாரிப்பின் பக்கம் திரும்பியது டிசம்பர் 1982 க்கும் 1985 செப்டெம்பருக்குமிடையில் TR 155 ரகப் பீரங்கியைக் கொள்வனவு செய்வதற்கு இராணுவ தலைமைப் பீடம் ஐந்து தடவைகள் முயற்சித்தது. ஆறாவது முறை, பெப்ரவரி 17, 1986 இல் காற்று போபர்ஸ் நிறுவனத்துக்குச் சாதகமாகத் திரும்பியது. பேரத்தில் போபர்ஸ் வெற்றியீட்டியது.

### பீரங்கிப் பேரத்தின் பின்னணி

போபர்ஸ் FH 77B ஹொவிற்சர் பீரங்கிகளை சுவீடனிடமிருந்து இந்தியா கொள்வனவு செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வர ராஜீவ் காந்தியைத் தள்ளியதற்கு முக்கிய காரணம் 'றோ' என்ற இந்திய புலனாய்வு அமைப்பு, பிரான்சைவிட சுவீடனின் நட்புறவு இந்தியாவுக்குப் பயன்பொருக்கமானது என்று 'றோ' ராஜீவ் காந்திக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. பீரங்கி வியாபாரப் பேரத்தில் போபர்ஸுக்குச் சாதகமாக சூழ்நிலையை உருவாக்க இந்துஜா. வின்சாடா ஆகிய இந்திய தரகு நிறுவனங்களும் இந்திய கொள்கை வகுப்பாளர் மட்டத்தில் தம் கைவரிசையைக் காட்டியுள்ளன. பலம் பொருந்திய அப்போதைய காங்கிரஸ் அரசியல் வாதியான அருண்நேருவும் மற்றும் ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குரிய சகபாடிகளும் போபர்ஸ் நிறுவனத்துடன் பேரம் பேசுவதையே விரும்பினர். ஏ. ஈ. சேர்விஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பொப் வில்சனும் போபர்ஸ் பேரத்தின் இறுதியாட்டத்தில் முக்கிய பங்கு வகித்தார். முன்னாள் போர்வீரனாகிய இவர் இங்கிலாந்து நாட்டுச் சட்டத்தரணி என்பது குறிப்பிடத்தக்கது.

1985- இல் ராஜீவ் காந்தியின் உறவினரான அருண் நேரு போபர்ஸ் நிறுவன நிர்வாக மேலாளரைச் சந்தித்து இந்த விவகாரத்தில் இந்திய கொள்கை வகுப்பாளருக்குக் 'கையில் வைக்காமல்' போபர்ஸ் பீரங்கி வியாபாரம் சாத்தியமடையாது என்றார். இது போபர்ஸ் நிர்வாக மேலாளருக்குப் பெரும் ஆச்சரியமாகப் படவில்லை. காரணம் போபர்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஏலவே புதுடில்லியில் இந்திய புலனாய்வுப் பிரிவில ஊடுருவியிருந்தார்கள். அப்போதைய சுவீடன் பிரதம மந்திரி ஒல்வ் பாமும் இந்தப் பீரங்கிப் பேரத்தில் தன் கைகளை நனைத்திருந்தவர். சுவீடன் நாட்டுப் பிரதமர், ராஜீவ் காந்தியை சந்தித்தபோது 8.4 மில்லியன்கள் சொர்ணர் பெறுமதியான வியாபாரத்தை போபஸ்சுடன் ஆரம்பிக்குமாறு கேட்டுள்ளார்.

சுவீடன் பிரதமர் ஒல்வ் பாமின் கொலையும் ஒரு முக்கிய காலகட்டதில் நடைபெற்றுள்ளது 11 - 14 பெப்ரவரி. 1985 காலப் பகுதியில் பீரங்கிப் பேரத்தில் பிரான்ஸ் நிறுவனத்தை போபர்ஸ் வென்று விட்டதாகப் பச்சைக் கொடி காட்டப்பட்டது இக்காலப் பகுதியில்தான் ஒல்வ் பாம் கொலையுண்டார். இக்கொலைக்கும் போபர்ஸ்பேரத்துற்கும் தொடர்பிருக்கலாம் என்று நோபல் இன்டஸ்ரீஸ் தரப்பு சந்தேகம் தெரிவிக்கின்றது. ஆனால் அதற்கான ஆதாரங்கள் தம்மிடமில்லை என்று அங்கலாய்க்கிறார் நோபல் இன்டஸ்ரீஸ் முக்கியஸ்தர்.

நவம்பர் 15, 1985 இல் முன்னோடி நடவடிக்கையாக இரு தரப்பினருக்குமிடையில் தரகு ஒப்பந்தம் ஒன்று உருவாகியது. ஒப்பந்ததின் பிரகாரம்3 விகிதம் தரகுப் பணம் ராஜீவ் காந்திக்குத் தருவதாகத் தெரிவிக்கப்பட்டது. சுவீடன் நாணயத்தில் இதன் பெறுமதி 252.3 மில்லியன் கொர்ணராகும். (1986 ஆம் ஆண்டு நாணய மாற்று விகிதத்தின் படி இத்தொகை 43.1 கோடி ரூபாவாகும்) மார்ச் 31 1986 க்கிடையில் இந்தியா அதன் பேரத்தைக் கௌரவிக்கும் பட்சத்தில் தரகுப் பணம் லண்டனில் ஏ. ஈ. சேர்விஸ் நிறுவனத்திடம் வழங்கப்படும் என்று போபர்ஸ் தெரிவித்தது இதன் பிரகாரம் மார்ச் 24, 1986 இல் இந்தியா-போபர்ஸ் ஒப்பந்தம் கைசாத்தாகியது.

மூன்று கட்டங்களாகத் தரகுப்பணம் வழங்கப்பட்டது.

★ முதலாவது கட்டத்தில் வின்சாடாவுக்கு 188 மில். கொர்ணர் பானாமாவியுள்ள செவென்ஸ்கா நிறுவனம் மூலம் வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக 10, 15 வருடங்கள் போபர்ஸுக்குத்தரகு வேலை செய்தமைக்காகவே இத்தொகை வழங்கப்பட்டது செவென்ஸ்கா வின்சாசாடாவுக்குச் சொந்தமான நிறுவனமாகும். இந்திய புலனாய்வுத் துறையினர் இன்று வரை பனாமா பக்கம் தலைகூட வைத்தும் படுக்கவில்லை.

★ இரண்டாவது கொடுப்பனவு சுவிற்சலாந்தில் உள்ள வங்கிக்கணக்கில் இந்து ஜா நிறுவனத்துக் 80 8 மில்லியன் டொலர் இடப்பட்டது.

★ மூன்றாவது கொடுப்பனவு மிக முக்கியமானது. செப்டம்பர் 3, 1986 இல் ஏ. ஈ. சேர்விஸ் மூலமாக ராஜீவ் காந்திக்கு தரகுப் பணமாகச் சேர வேண்டிய பணத்தின்ஒரு பகுதியான 50.5 மில்லியன் கொர்ணர் கைமாறியது இப்பணம் முதலில் சூரிச்சிபிலுள்ளநோர்டிஸ்பினான்ஸ் வங்கியில் ஏ ஈ. சேர்விஸ் நிறுவனத்தில் கணக்கிலிடப்பட்டது. இப்பணம் உடனடியாக கோல்பார் இன்வெஸ்மென்ருக்கு மாற்றப்பட்டது இந்நிறுவனம் பனமாவில் உள்ளதுஏ. ஈ. சேர்விஸ்ராஜீவ் காந்தியின் ஏஜென்டாக இயங்கியது. இவ்விடயத்திலும்இந்திய புலனாய்வுத்துறை அதன்அகலக் காலை பனாமா வரை வைக்க முடியவில்லை.

போபர்ஸ் இக் கொடுப்பனவுகளை விட மேலதிகமாகவும் பணம் வழங்கத்தயாராகவிருந்தது ஆனால் போபர்ஸ் ஏப்ரல 1987 இல்தொடர்புச்சாதனங்கள் ஊழலை மணந்து பிடித்து வெளியிட்டதும் போபர்ஸ் பணக்கொடுப்பனவைத் தன்னிச்சையாக நிறுத்திக் கொண்டது. போபர்ஸ் ஊழலை முதன் முதலாக வெளியிட்ட இந்தியப்பத்திரிகையாளர் பம்பாயில் விபத்தொன்றில் காலமானார்.

★

இந்தியாவில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசுகள் கடந்த காலங்களில் பல ஊழல்கள் தொடர்பான விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளான. நாளடைவில் விசாரணைகள் முடங்கிப் போய் விடுகின்றன குற்றவாளிகளும் தண்டனை பெறாமல் தப்பித்துக் கொள்றார்கள். காங்கிரஸ் அல்லாத அரசுகளும் விசாரணையை ஆரம்பிக்கின்றன ஆனால் ஸ்திரமின்மையால் சிறிது காலத்தில் குடைசாய்ந்து விடுகின்றன. விசாரணைக்கும் முழுக்குப் போடப்படுகிறது.

இந்திரா காந்தியின் பெயரில் அல்லது அவர் பெயரைச் சொல்லி 60 கோடி ரூபா மோசடி ராஜீவ் காலத்து ஏயர் பஸ்-320 எச். டீ. டபில்யூ நீர்மூழ்கிக் கப்பல் விவகாரம், அரசியல் வாதிகள் பற்றிய அம்ரித் நாத்தாவின் சினிமாப் படத்தை சஞ்சாய் காந்தி எரித்தது போன்ற முக்கிய தேசிய ஊழல்கள் இன்று வரை தீர்க்கப்படாத பிரச்னைகளாகவே உள்ளன.

நன்றி - புரண்ட்லைன்.

# உல்பா மற்றும் போடோக்களுடன்

## அணு ஆயுதங்களுக்கு

# முற்றாக தடை விதிக்க

டத்தை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்து முழுமையான சிங்கள மாவட்டமாக மாற்றி விடலாம் என சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

இதேவேளை, வவுனியாவில் மேற்கொள்ளப்பட இருக்கும் குடியேற்றத் திட்டமானது வவுனியா நகரைச் சூழவுள்ள பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுதல வவுனியா நகரை சிங்களவரின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரும் நடவடிக்கையாகும். இத திட்டத்திற்கு தேசிய நீர்ப்பாசன புனரமைப்புத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட 200 கோடி ரூபாவில் இருந்து செலவீடு செய்யப்படவுள்ளது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையானது கூர்மையடைந்து, தீர்க்க முடியாமல் இழுபறி நிலையில் இருப்பதற்குக் காரணம் அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றங்களே ஆகும். ஆனால், இனப்பிரச்சினை தீர்வைப்பற்றி பேசும் சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் தற்பொழுதும் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி என்ற பேச்சை எடுத்தாலே அது ஓர் ஆக்கிரமிப்புத்திட்டமாகவே உள்ளது தற்பொழுதும்திருமலை மாவட்ட அபிவிருத்தி, வவுனியா மாவட்ட அபிவிருத்தி என்று பேசுவதெல்லாம்ஆக்கிரமிப்பதற்கான அத்திவாரங்களேயாகும் இந்நிலை மாறும் வரை இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பது என்பது கேள்விக்குரிய தொன்றாகவே இருக்கும்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி என்ற போர்வையில் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் நிதி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கே பெரிதும் பயன்படுகின்றது. இதனை உதவி வழங்கும் நாடுகளும் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என கடந்த மாதம் பரிஸில் கூடிய இலங்கைக்கு உதவி வழங்கிய நாடுகள் தெரிவித்ததாகவும் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் இனப்பிரச்சினை விவகாரத்தில் மிகுந்த அக்கறையுடன் இருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன. ஆனால், அவர்கள் வழங்கும் நிதி உதவிகள் இனப்பிரச்சினையை மேலும் தீவிரமாக்குவதற்கு உதவுபவையாகவுள்ளனவே ஒழிய இனப்பிரச்சினை தீர்விற்கு வழி வகுப்பவையாக இல்லை. இந்நிலையில், மேற்குலகம் இனப்பிரச்சினைக்கு உண்மையான ஒரு தீர்வு காண விரும்புகின்றனவா என்பதை எவரும் சந்தேகிப்பது நியாயமானதே.

## ஓய்வு பெறும் யாழ். ஆயர்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆயர் அதி. வண. டாக்டர் பி. தியோகுப்பிள்ளை வரும் ஏப்பிரல் மாதம் ஓய்வுபெறவுள்ளார். அவருக்கு வயது 70 ஆகும்.

மட்டக்களப்பு ஆயர் அதி. வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை யாழ். ஆயராக நியமனம் பெறவுள்ளார்.

## மணலாற்று

அன்றைய மோதலில் 2 ஆம் லெப்டினன் அறத்திருவன் அல்லது ஆனந்தன் (சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை, தம்பிலுவில், 2 ஆம் குறிச்சி, மேகலா வீதி அம்பாறை) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# உல்பா மற்றும் போடோக்களுடன் அசாம் அரசு டில்லியில் பேச்சு

(டில்லி)

அசாம் அரசுக்கும் உல்பா அமைப்புக்கும் இடையேயான நேரடிப் பேச்சுவார்த்தைகள் அடுத்த மாத ஆரம்பத்தில் புதுடில்லியில் ஆரம்பிக்கும் என்று அசாம் மாநில முதலவர் ஹதேஸ்வர் சைஜ்யா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் அசாம் அரசு உல்பா அமைப்பு- போடோதீவிர வாதிகள் ஆகியவற்றுடன் ஒரே நேரத்தில் தனித்தனியாக நடத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.

உல்பா அமைப்பின் உயர் தலைவர்களோடு ஒரு சுற்றுப் பேச்சுக்கள் ஏற்கனவே நடத்தப்பட்டிருப்பதாகவும் அரசியல் சாசன வரம்புக்குள் பிரச்சனையை தீர்த்துக்கொள்வதான தனது வாக்குறுதியை உல்பா மீளவும் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

போடோ பிரச்சனை பற்றிக் குறிப்பிடுகையில் அனைத்து போடோ மாணவர் சங்கத்தின் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட மூன்று அங்கத்தினர் கமிற்றி இம் மாத முடிவுக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் எனவும் அதன் அடிப்படையில் போடோ மாணவர் பிரதிநிதிகள், அசாம் அரசு, மத்திய அரசு முத்தரப்புபேச்சுக்கள் நடத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

## பிரேசிலில் மண் சரிவு 30 பேர் பலி; 60 பேர் காயம்

(லண்டன்)

பிரேஸில் பெலோஹொரி சோண்டே என்ற கைத்தொழில் நகர்ப்புறத்தில் இடம் பெற்ற பயங்கர மண் சரிவொன்று காரணமாக முப்பது பேர் வரையில் பலியாகியுள்ளதாகவும் அறுபது பேர்வரையில் காயமடைந்துள்ளதாகவும் பலரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மண்ணில் புதையுண்டவர்களை மீட்பதில் நிவாரணப் பணியினர் துரிதமாக செயல்பட்டு வருகின்றனர்.

புதையுண்டிருந்த அறுபது பேர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். இறந்த முப்பது பேரின் சடலங்களும் வெளியே எடுக்கப்பட்டுள்ளன.

சேரிப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த அழுக்குக் குவியல்கள் மண் சரிவுடன் சேர்ந்து சரிந்ததால் நிலைமை மோசமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பன்னிரண்டு குடியரசுகளில் அமெரிக்க தூதரகங்கள்

(வாஷிங்டன்)

ஜோர்ஜியா தவிர்ந்த ஏனைய பன்னிரண்டு முன்னாள் சோவியத் குடியரசுகளில் அமெரிக்கா தனது தூதரகங்களை திறந்துள்ளன.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேகர் கடந்த பெப்ரவரி மாதம் மேற்கொண்ட மத்திய ஆசிய விஜயத்தின் போது உஸ்பெகிஸ்தான், அஸர்பைசான், மோல்டோவா, டேர்க்மெனிஸ்தான், தாஜிக்கிஸ்தான் குடியரசுகளுக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தின் பின்னர் பன்னிரண்டு முன்னாள் சோவியத் குடியரசுகளில் தூதரகங்களைஅமைக்க அமெரிக்கா முடிவு செய்தது.

ஜோர்ஜியாவில் அரசியல் நிலைமை சுமுகமான நிலைமையில் இல்லாதிருப்பதால், ராஜதந்திர உறவை அங்கு ஏற்படுத்த தடங்கலாக இருப்பதாக தெரிவிக்கப்பட்ட போதும், முன்னாள் சோவியத் வெளிநாட்டமைச்சர் எட்வாட் ஷெவர்நாட்சே ஜோர்ஜியாவில் ராஜ்யசபாத் தலைவராக இருப்பதாலும் அவரும் ஜேம்ஸ் பேகரும் நண்பர்களாக இருப்பதாலும் ஜோர்ஜியாவில் தூதரகம் ஒன்றைத் திறக்கும் பணிகள் துரிதமாகுமென கருதப்படுகிறது.

## செயற்கைஇரத்தம் தயாரிப்பு பரிசோதனை வெற்றி

(லண்டன்)

புதுவி செயற்கை இரத்தம் ஒன்றைக் கண்டு பிடிப்பதில் பிரித்தானிய விஞ்ஞானிகள் மேற்கொண்ட பரிசோதனை ஒன்று வெற்றியளித்துள்ளது

பிரித்தானிய விஞ்ஞானிகள் குழுவொன்று அமெரிக்க விஞ்ஞானிகளுடன் இணைந்து இந்தப் பரிசோதனையை நடத்தியது. ஆய்வுகள் கொலராடோ சோயடோகன் இன்னிலும் பிரித்தானியாவிலுள்ள கேம்பிரிஜ் மருத்துவ ஆராய்ச்சிச் சபை ஆய்வு கூடத்திலும் நடத்தப்பட்டன.

இரத்தத்தின் நிறத்தைப் பேண ஹேமோகுளோபின் உதவுகிறது செயற்கை குருதிச் சிறு துணிக்கைகளில் ஹேமோகுளோபின் என்ற இந்த இரத்தத்தின் நிறத்தைப் பேணும் உயிரணுக்கள் காணப்படுகின்றன. செயற்கை இரத்தமும் இத்தன்மையுடனேயே உருவாக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்களுக்கு

## முற்றாக தடை விதிக்க சீனா, நேபாளம் கோரிக்கை

(காட்மண்டு)

அணு ஆயுதங்களை முற்றிலும் தடைசெய்து எல்லாவற்றையும் அழித்து விட வேண்டும் என்று சீனாவும் நேபாளமும் கூட்டாக கேட்டுக் கொண்டிருக்கின்றன.

நேபாள பிரதமர் ஜி. பி. கொயிலாலா மேற்கொண்ட ஏழு நாள் சீனப் பயணத்தின் இறுதியில் பீக்கிங்கிலும், காட்மண்டுவிலும் ஒரே வேளையில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், புதியதோர் உலக முறைமை தேவை என்றும், நாடுகளுக்கு இடையிலான பிரச்சினைகளை படைப்பலத்தைப் பயன்படுத்தாமல் அமைதியான முறையில் பேசித்தான் தீர்க்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரபுக்கள் சபை நீக்கப்படும்! தொழிற் கட்சி அறிவிப்பு

(லண்டன்)

ஏப்ரல் ஒன்பதாம் திகதி நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் தாங்கள் வெற்றி பெற்றால் பிரபுக்கள் சபையை இல்லாமல் செய்து விடுவோமென தொழிற் கட்சி அறிவித்துள்ளது.

பிரிட்டனில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் தொடர்பாக தொழிற் கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் பிரகடனத்தில், பிரபுக்கள் சபை முற்றாக ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட உயர் சபை ஒன்று நிறுவப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த பிரபுக்கள் சபையில் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஆயுட் காலம் முழுவதும் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் டில்லி விஜயம்

வியட்நாமின் வெளிநாட்டமைச்சர் ஒரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி வந்துள்ளார்.

வியட்நாமிற்கும் இந்தியாவிற்குமிடையே பொருளாதார வர்த்தக உடன்பாடுகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தவே அமைச்சர் புதுடில்லி வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சருடன் வியட்நாமின் உயர்மட்டக் குழு ஒன்றும் வந்துள்ளது.

## வெளியேற உத்தரவு

லிபியாவில் இருக்கும் அமெரிக்கர்களை உடனடியாக வெளியேறும்படி அமெரிக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. லிபியாமீது ஐ.நா. பொருளாதார தடையைக் கொண்டு வரலாம் என்பதனாலேயே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

ஈழநாதம்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான

# இந்தியாவின் நடவடிக்கைகள் பேச்சுவார்த்தையைப் பாதிக்காது

## இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி

[சென்னை]

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்வது அல்லது ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விசாரணைக்காகப் பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இந்தியஅரசு வேண்டுகோள் விடுவது புலிகள் - சிறிலங்கா அரசு தரப்புப் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்காது.

இவ்வாறு இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் தொழில்துறை ராஜாங்க அமைச்சர் எம் எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைக்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழுவுடன் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பதற்கு எதுவும் தடையாக இருக்காது என அவர் குறிப்பிட்டார்.

ஆனால் அரசுக்கும் புலிகளுக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கும் பட்சத்தில் சிறிலங்கா அரசு இந்தியாவின் கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பது கடினம் தான் என்று செய்தியாளர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

## பேராசிரியர் கந்தையா உருவப்பட திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக தாவரவியல் பேராசிரியர் கோ. கந்தையா அவர்களின் உருவப்படம் திரைநீக்கம் இன்று பி. ப. 3. 30 மணிக்கு தாவரவியல் பீடத்தில் நடைபெறவுள்ளது.

வெளிநாடுகளுக்கு நன்மை கருதி ஓடாமல் இங்கிருந்தபடியே பல ஆய்வுகளை இவர் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தாவரவியல் பேராசிரியராகக் கடமையாற்றிப் பின்னர், கிளிநொச்சியில் அமைந்த தாவரவியல் பீடத்தில் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றார். கிளிநொச்சியில் சேவையாற்றிய காலத்தில் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

### இன்டர்

கூறுகிறது ஆனால் தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளஉயர்வுஅளிக்க நடவடிக்கை எடுத்தது. இதற்கென கோடிக்கணக்கில் இன்று செலவாகின்றது. ஆனால் தொழிலாளர் சம்பளஉயர்வை நாம் எதிர்க்கவில்லை.

தோட்ட நிர்வாகத்தை கைப்பற்ற சில சக்திகள் முனைகின்றன இது விடயத்தில் விழிப்புத்தேவைஎன அவர் தெரிவித்தார்.

### மேலதிக

குறிப்பிட்ட நேர இடைவெளிக்கு முன்னர் பொருள்களை லொறிகளில் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்பதாலேயே மேலதிக லொறிகளை அனுப்புவது சாத்தியமற்றதாகியுள்ளது.

மேலும் தற்பொழுது இத்துறைமுகத்தில் கடமையில் இருக்கும் துறைமுக ஊழியர்கள் மூலம் சுமார் 10 லொறிகளில் மட்டுமே குறிப்பிட்ட நேர இடைவெளியில் பொருள்களை ஏற்றமுடியும் என்பதால் தற்போதைக்கு மேலதிக உணவு லொறிகளை அனுப்பி பொருள்களை எடுத்துவருவது சாத்தியமில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

### மீனவர்களை

தது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இம் மீனவர்களை விடுதலை செய்தால் ஏனைய மீனவர்களுக்கு படிப்பினை இல்லாமல் போய்விடும் என்றும், தொடர்ந்தும் மீனவர்கள் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள கடற் பிராந்தியத்திற்குள் நுழைந்து விடுவார்கள் என்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கருதுவதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் மேற்படி மீனவர்களை விடுதலை செய்வதற்கு இராணுவ உயர் அதிகாரிகள் நேரடியாக மறுப்புத் தெரிவிக்காமல் விட்டாலும் மேற்படி காரணத்தை தொடர்ந்தும் வற்புறுத்தி வருவதாக தெரியவருகிறது. இதனால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தற்போதைக்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## சிறிலங்கா தூதரகத்தை தகர்ப்போமென மிரட்டல்

(சென்னை)

சென்னையிலுள்ள சிறிலங்கா தூதரகத்தை குண்டு வைத்துத் தகர்க்கப்போவதாக விடுதலைப்புலிகள் எச்சரிக்கை முன்னணி என்ற அமைப்பு டெலிபோனில் அச்சுறுத்தியதாக தூதரகத்தின் பிரதித் தூதுவர் வி கே. வால்சன் தெரிவித்தார். கடந்த வாரத்தில் இரு தடவைகள் இவ்வாறு தூதரகத்துக்கு எச்சரிக்கை செய்து டெலிபோன் அழைப்புகள் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் கடந்த புதனன்று வந்த டெலிபோன் அழைப்பில் விடுதலைப்புலிகள் எச்சரிக்கை முன்னணியைச் சேர்ந்த ஜூலி என்று தனது பெயரைத் தெரிவித்த ஒருவர் பி.ப. 4 மணிக்கு தூதரகத்தில் குண்டொன்று வெடிக்கும் என்று எச்சரித்ததாக பிரதித் தூதுவர் தெரிவித்தார்.

பொலிசுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து குண்டைச் செயலிழக்கச் செய்யும் பொலிஸ் குழு விரைந்தது. தேடுதலை மேற்கொண்ட பொலிஸ் குழு தூதரக வளாகத்தில் குண்டு எதுவும் இல்லை என்று தெரிவித்தது.

வியாழனன்று அதேபேர்வழி டெலிபோனில் அழைத்து அங்கிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் புலிகள் குழுவொன்று 500 மில்லியன் ரூபா பணத்துடன் தமிழ் நாட்டிற்குள் ஊடுருவி இருப்பதாகத் தெரிவித்து ஜெயலலிதாவை மாத்திரமல்ல, பிரதமர் பி வி. நரசிம்மராவ் அவர்களையும் கொல்லப் போவதாக டெலிபோனில் எச்சரிக்கப்பட்டது. சிறிலங்காவில் தமிழர்கள் கொலை செய்யப்படும் போது தமிழ் நாட்டில் சமாதானம் நிலவாது எனவும் டெலிபோனில் தெரிவிக்கப்பட்டது.

### கிளிநொச்சி

யலுவலகம் அறிவித்துள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்து இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கிறிக்கட்

## இங். அரையிறுதியில் வெற்றி புதன்கிழமை இறுதிபோட்டி

(சிட்னி)

சிட்னியில் நேற்று நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிக்கான இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. வெற்றிபெற 45 ஓவர்களில் 253 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் தனது ஆட்டத்தை தொடங்கிய தென்னாபிரிக்க அணி 43 வது ஓவரில் 231 ஓட்டங்களைப் பெற்றது. இந்த நிலையில் 13 பந்துகளுக்கு 22 ஓட்டங்களை மட்டுமே தென்னாபிரிக்கா பெறவேண்டியிருந்தது. அப்பொழுது பெய்த மழைகாரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. பின்னர் ஆட்டம் தொடங்கியபோதுஒரேயொரு பந்துக்கு 22 ஓட்டங்களைப் பெற்றால் மட்டுமே தென்னாபிரிக்கா வெற்றிபெறமுடியும் என அறிவிக்கப்பட்டது. தென்னாபிரிக்கா ஒருபந்தில் ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்ற நிலையில் இங்கிலாந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டியில் புதன்கிழமை மெல்போனில் இங்கிலாந்து பாகிஸ்தானை எதிர்த்து விளையாடும்.

## தெற்கில் ஜே.வி.பி. தலைவர் ஒலிப்பதிவு நாடா

[கொழும்பு]

ஜனதா விமுக்திப் பெரமுனை (ஜே. வி. பி.) யின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்காவின் பேச்சொன்று அடங்கிய ஒலிப்பதிவு நாடா தெற்கில் விநியோகிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த நாடாவைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பொலிசுடன் தொடர்புகொள்ளும்படி பொலிஸ் தலைமையகம் கேட்டுள்ளது.

ஒலிப்பதிவு நாடாக்கள் லண்டனில் பதியப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகிறது,

### மூதூர்

சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படை தலைமையலுவலகம் அறிவித்துள்ளது. அங்கு நேற்று இரவுநேர ஊரடங்கு அமுலசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

### பொலநறுவை

டக்களப்பு) ஆகிய மூன்று வீரவேங்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## நலன்புரி சங்கத்துடன் தொடர்புகொள்க

(யாழ்ப்பாணம்)

''யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த வெள்ளிக் கிழமை 10 ஆம் இலக்க விடுதியில் திரு. தருமலிங்கம் புதுக்குடியிருப்பு என்பவர் இவருடைய மனைவி திருமதி. சிவபாக்கியத்தினால் அனுமதிக்கப் பட்டார்.

இவருடைய மனைவியோ அன்றி உறவினர்களோ உடனடியாக நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன்தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



# ஓராண்டு நினைவாக



# ஓராண்டு நினைவாக

முளையாக
09-09-1936

விதையாக
23-03-1991

கலங்கரை விளக்கமாக ஒளியேற்றி நின்றாய்
கரைசேர நினைப்போர்க்கு வழியாகி நின்றாய்
தமிழ் ஈழமண்ணிற்கு வளம் சேர்த்து நின்றாய்
வளம் மேலும் சிறக்கவென்றா உரமாகிவிட்டாய்?

'உங்கள் வழி ஒன்றுதான் எங்கள் வழி என்று நாம்,
நேர்மை ஒருநாளும் தவறாமல் நடைபோடுவோம்'

இயக்குநர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## பேராசிரியர் சோ. கந்தையா

B.Sc. (Hons.) Ph.D (London)

(பீடாதிபதி:- விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், கிளிநொச்சி, முன்னாள் துறைத்தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் தாவரவியற்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்

[சி/4088]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது